ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கவளயானை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கவளயானை ॥

## திருநாங்கூர்ப் பார்த்தன்பள்ளி

‡கவள யானைக் கொம்பொசித்த⋆
    கண்ணன் என்றும் காமரு சீர்⋆
குவளை மேகம் அன்ன மேனி⋆
    கொண்ட கோன் என்னானை என்றும்⋆
தவள மாட நீடு நாங்கைத்⋆
    தாமரையாள் கேள்வன் என்றும்⋆
பவள வாயாள் என் மடந்தை⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (1)

கஞ்சன் விட்ட வெஞ்சினத்த⋆
    களிறடர்த்த காளை என்றும்⋆
வஞ்ச மேவி வந்த பேயின்⋆
    உயிரை உண்ட மாயன் என்றும்⋆
செஞ்சொலாளர் நீடு நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆
பஞ்சியன்ன மெல்லடியாள்⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (2)

அண்டர் கோன் என்னானை என்றும்⋆
    ஆயர் மாதர் கொங்கை புல்கு
செண்டன் என்றும்⋆ நான்மறைகள்
    தேடி ஓடும்⋆ செல்வன் என்றும்⋆
வண்டுலவு பொழில் கொள் நாங்கை⋆
    மன்னு மாயன் என்றென்றோதி⋆
பண்டு போல் அன்றென் மடந்தை⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (3)

www.prapatti.com

கொல்லை ஆனாள் பரிசழிந்தாள்⋆
    கோல் வளையார் தம் முகப்பே⋆
மல்லை முந்நீர் தட்டிலங்கை⋆
    கட்டழித்த மாயன் என்றும்⋆
செல்வம் மல்கு மறையோர் நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆
பல் வளையாள் என் மடந்தை⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (4)

அரக்கர் ஆவி மாள அன்று⋆
    ஆழ் கடல் சூழ் இலங்கை செற்ற⋆
குரக்கரசன் என்றும்⋆ கோல
    வில்லி என்றும்⋆ மா மதியை
நெருக்கு மாட நீடு நாங்கை⋆
    நின்மலன் தான் என்றென்றோதி⋆
பரக்கழிந்தாள் என் மடந்தை⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (5)

ஞால முற்றும் உண்டுமிழிந்த⋆
    நாதன் என்றும்⋆ நானிலம் சூழ்
வேலை அன்ன கோல மேனி⋆
    வண்ணன் என்றும்⋆ மேல் எழுந்து
சேல் உகளும் வயல் கொள் நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆
பாலின் நல்ல மென் மொழியாள்⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (6)

நாடி என் தன் உள்ளம் கொண்ட⋆
    நாதன் என்றும்⋆ நான் மறைகள்
தேடி என்றும் காண மாட்டாச்⋆
    செல்வன் என்றும்⋆ சிறை கொள் வண்டு
சேடுலவு பொழில் கொள் நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆

www.prapatti.com

பாடகம் சேர் மெல் அடியாள்⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (7)

உலகம் ஏத்தும் ஒருவன் என்றும்⋆
    ஒண் சுடரோடும்பர் எய்தா⋆
நிலவும் ஆழிப் படையன் என்றும்⋆
    நேசன் என்றும்⋆ தென் திசைக்குத்
திலதம் அன்ன மறையோர் நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆
பலரும் ஏச என் மடந்தை⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (8)

கண்ணன் என்றும் வானவர்கள்⋆
    காதலித்து மலர்கள் தூவும்⋆
எண்ணன் என்றும் இன்பன் என்றும்⋆
    ஏழ் உலுகுக்காதி என்றும்⋆
திண்ண மாட நீடு நாங்கைத்⋆
    தேவதேவன் என்றென்றோதி⋆
பண்ணின் அன்ன மென் மொழியாள்⋆
    பார்த்தன் பள்ளி பாடுவாளே (9)

‡பாருள் நல்ல மறையோர் நாங்கைப்⋆
    பார்த்தன் பள்ளிச் செங்கண் மாலை⋆
வார் கொள் நல்ல முலை மடவாள்
    பாடலை⋆ தாய் மொழிந்த மாற்றம்⋆
கூர் கொள் நல்ல வேல் கலியன்⋆
    கூறு தமிழ் பத்தும் வல்லார்⋆
ஏர் கொள் நல்ல வைகுந்தத்துள்⋆
    இன்பம் நாளும் எய்துவாரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com